ஜாஎல பிரதேச சபை - 2024
----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜாஎல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகலவிரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவு சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஜாஎல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

	உரிய நியமங்களுடன் தொடர்புடன் இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் பந்தி 2.5 இன் படி நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரிய கிடைத்திருந்த முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 166,191,135 தொகை மீளாய்வாண்டின் வருமானம் என கணிக்கப்பட்டு கணக்கீடு செய்ப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது முத்திரைக் கட்டண வருமானம் காசு அடிப்படையில் கணக்குப் பதிவு செய்து வெளியிடப்படும் என.	கணக்கீட்டு நியமங்களின் படி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் பந்தி 3.2 இன் பிரகாரம் செயற்பாட்டுத் தொழில்பாடுகளின் மூலமான தேறிய காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது காசுப்பாய்ச்தல் கூற்றின் மிகைக்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்த ரூபா 177,961,821 இற்கான மீதியில் ரூபா 1,680,661 இற்கான இனங்காண முடியாத மீதியொன்றும் காணப்பட்டது.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நியமத்தின் படி காசுப்பாய்ச்சல் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ) நியமத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் பந்தி 6.13 இன் படி சொத்தொன்று பயன்படுத்துவற்காக பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் முதல் அதன் பெருமானத் தேய்வு மேற்கொள்ளல் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் பெறுமானத் தேய்வுக் கொள்கை என சொத்தொன்று கொள்வனவு செய்த ஆண்டின் பெறுமானத் தேய்வு கழிக்கப்படாமல் அப்புறப்படுத்தும் வருடத்தில் முழு ஆண்டிற்குமான பெறுமானத் தேய்வு கணிக்கப்படுகின்றனெதவும், நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் பயன்பாடு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிற்கு பின்னைய ஆண்டு முதல் பெறுமானத் தேய்வு கழிக்கப்படும் எனவும் காட்டப்பட்டிருந்து.	உள்ளூராட்சி திணைக்களத்தினால் வெளியிட்டிருந்த LGD/09/2019(1) இலக்கம் கொண்ட மற்றும் 2020.08.27 திகதிய சுற்றறிக்கையின் கணக்கீட்டுக் கொள்கைகள் அறிமுகப்படுத்தலின் கீழ் V ஆம் பந்தியின் படி பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டது என.	நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) கந்தான உப அலுவலகத்தின் கூரையின் திருத்தவேலை மேற்கொள்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3,520,122 இற்கான தொகையை திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பின் கீழ் பதிவு செய்வதற்கு பதிலாக கட்டிடங்களின் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.	வித்தியாசம் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்படும் என.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ) மூலதன மானியங்களின் ஆரம்ப மீதியில் அடங்கியுள்ள பாதைகள், பாலங்கள், மதகுகளின் பெறுமதி ரூபா 5,601,150 தொகை மற்றும் பாத்திரங்களின் பெறுமதி ரூபா 545,000 தொகைக்கான சொத்துக்களுக்குரிய காலத் தேய்மானப் பெறுமதியாகிய ரூபா 669,115 தொகை அகழ்விரிவான வருமானம் என கணக்கீடு செய்திருக்கவில்லை.	அடுத்த ஆண்டுகளில் சரியாக தயாரிக்கப்படும் என.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் படி மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய அட்டவணைகளின் படி மீதிகளிடையே ரூபா 2,736,292 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	வித்தியாசம் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்படும் என.	அட்டவணைகளை நாளதுவரையாக வேணி அதனடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
கூட்டுப் பெறுமதி ரூபா 1,085,099 தொகைக்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வுகள் சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியவில்லை.	எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	குறிப்பிட்ட அட்டவணைகள் / காலப் பகுப்பாய்வுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபை நிதி நிருவாகத்துக்குரிய கணக்கு அலுவல்களுக்கான விதிகள்			
	(i) இலக்கம் 344	டென்டர் குழுக்களில் மற்றும் மதிப்பாய்வுக் குழுக்களில் அனைத்து அங்கத்தவர்களும் பக்க சார்பற்றவர்கள் எனவும், நேர்மையான, தனிப்பட்ட தொடர்புகள் காணப்படவில்லை என அதன் ஆரம்பக் கூட்டத்தில் கையொப்பமிடப்பட வேண்டியிருந்த போதிலும், ராகம வாகனத் தரிப்பிடத்தை வாடகைக்கு கொடுக்கும் போது அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சரி செய்வதற்க நடவடிக்கை எடுக்கப்படும் என.	விதிகளின் படி செயற்பட வேண்டும்.
	(ii) இலக்கம் 349	பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சபையினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என.	விதிகளின் படி செயற்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 (1)	02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 3,307,890 இற்கான காலவதியாகிய வைப்புக்களை ஆதனவளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர் கால்த்தில் வைப்புக்களை ஆதனவளிப்புச் செய்தல் மேற்கொள்ளப்படும் என.	நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 260,402,469 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 108,925,589 தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
வீதவரி மற்றும் வரி	227,887	233,099	185,868	78,284	56,892	67,148	81,695	31,024
வாடகை	23,101	30,350	17,804	51,217	23,174	22,944	20,468	38,671
அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,917	2,123	2,123	-	1,067	1,748	1,748	-
ஏனைய வருமானங்கள்	1,705	1,578	711	918	780	200	163	50
	254,610	**267,150**	**206,476**	**130,419**	**81,913**	**92,040**	**104,074**	**69,745**

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வருமானத்தில் ரூபா 130,419,166 இற்கான 01 வருடத்திற்கும் 03 இற்கும் இடைப்பட்ட ரூபா 37,240,709 தொகைக்கான, ரூபா 03 வருடங்களுக்கும் 05 இடைப்பட்ட ரூபா 32,321,331 தொகை, 05 வருடங்களுக்கு மிகையான ரூபா 20,575,497 தொகையும் காணப்பட்டது.	நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என.	நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) வீதவரியும் வரியும்

2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வீதவரியும் வரியும் ரூபா 78,284,399 தொகை நிலுவையாக காணப்பட்டதுடன், அதில் 01 வருடத்திற்கும் 03 இற்கும் இடைப்பட்ட ரூபா 29,515,847 தொகையும், ரூபா 03 வருடங்களுக்கும் 05 இடைப்பட்ட ரூபா 2,124,612 தொகையும், 05 வருடங்களுக்கு மிகையான ரூபா 15,596,851 தொகையும் காணப்பட்டது.	நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடமாடும் சேவை நடாத்தி வீட்டுக்கு வீடு சென்று அறவீடு செய்யும் வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டு வருகின்றது என.	நிலுவை வருமானத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ) ஏனைய வருமானங்கள்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பல வருட காலம் அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்திற்கான அட்டவணைகள் தயாரித்து வருமானத்தை இனங்காணப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால், பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் என மீதியொன்றினை கணக்கீடு செய்வதற்கு முடியாமல் உள்ளது.	பதிலளிக்கப்படவில்லை.	நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை தருவித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திட்டமிடல் குழுக்களுக்காக பங்குபற்றும் உத்தியோகத்தர்கள் திட்டமிடல் குழுவின் தினவரவுப் பதிவேட்டில், உள்வருதல் மற்றும் வெளிச் செல்வதற்காக கையொப்பமிடப்பட்ட போதிலும், விரலடையாள இயந்திரத்தின் படி குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்ட நாட்களில் கூட்டங்களில் பங்குவற்றிய உத்தியோகத்தர்கள் வெளிச் சென்ற நேரம் திட்டமிடல் குழுவின் உள்வருதல் பதிவேட்டின் படி வெளிச் செல்லல் நேரம் ஒன்றினொன்று மாற்றமான 22 சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.	திட்டமிடல் குழுக்கூட்டங்கள் முடிவடைந்து வெளிச் செல்லும் போது திட்டமிடல் குழுக் கூட்டத்தில் பங்குவற்றியவர்களை உள்வருதல் மற்றும் வெளிச்செல்லலை அடையாளப்படுத்துவதற்காக தின வரவுப் பதிவேட்டில் கையொப்பமிடப்பட்டு வெளிச்செல்லப்படுகின்றது என.	சபையின் உத்தியோகத்தர்களின் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் நேரப் பதிவு இயந்திரத்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	திட்டமிடல் குழுக் கூட்டத்தின் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் பதிவேட்டின் படி வெளிச் செல்லல் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், நேரப் பதிவு இயந்திரத்தின் படி வெளிச் செல்லல் பதிவு செய்யப்பட்டிருக்காத சந்தர்ப்பங்களில் மற்றும் விடுமுறை பெற்றுள்ள	நேரப் பதிவு இயந்திரத்தின் மூலம் வெளிச் செல்லல் பதிவு செய்தல் மேற்கொள்ளப்படவில்லை என.	திட்டமிடல் குழுக்கள் நடாத்துதல், உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் மற்றும் படிகள் கொடுப்பனவுகளின் உண்மையான தன்மை

	சந்தர்ப்பங்களில் குழு அமர்வுக் கொடுப்பனவு என ரூபா 52,500 செலுத்தப்பட்டிருந்தது.		உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(இ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பலவினக் கடன் கொடுத்தோர் ரூபா 222,008,150 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன், 01 வருடத்திற்கும் 03 இற்கும் இடைப்பட்ட ரூபா 68,327,295 தொகையும், 03 வருடங்களுக்கு மிகையான ரூபா 1,438,387 தொகையும் காணப்பட்டது. இந்த மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கடன் கொடுத்தோர் மீதிகளின் உளமையை இனங்கண்டு தீர்க்கப்பட வேண்டும்.
(ஈ)	கப் வண்டியொன்றின் வருடாந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் 2017 நவம்பர் 28 திகதியின் பின்னர் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. 2021 செப்தம்பர் 28 திகதியின் பின்னர் வாகனத்தின் சர்விஸ் பண்ணுதல் நாளதுவரையாக ஆக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது இதற்காக நியாயப்படுத்தல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு காப்புறுதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	வாகனத்தின் சர்விஸ் மேற்கொண்டு வருடாந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஒக்தோபர் 23 திகதி ராகம தேவத்தை வீதியில் கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கணிப்பீட்டு அறிக்கையின் படி 09 வியாபார நிலையங்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் இவ்வாறான நிலைமைகள் தொடர்பாக கவனம் செலுத்தி உரிய வருமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கணிப்பீட்டு அலுவல்கள் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	சபையினால் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த ராகம வாகனத் தரிப்பிடத்துக்குரிய தரைப் பகுதியின் அளவு அமைந்துள்ள இடம் வாகனங்கள், நிறுத்தக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ஆகிய விபரங்கள் எதுவும் உடன்படிக்கையில் அடங்கியிருக்கவில்லை. அதன்படி, வாகனத் தரிப்பிடம் என பயன்படுத்தப்படுகின்ற தரைப் பிரதேசம் பௌதீக பரிசோதனையின் போது சரியாக இனங்காண முடியாமல் இருந்தது.	வாகனத் தரிப்பிடத்தை சுற்றி GI குழாய்கள் பொருத்தப்பட்டு வலைகளினால் மூடப்பட்டு எல்லைகள் அடையாளப்படுத்தப்பட்டு காணப்பட்டது என.	உடன்படிக்கையில் தரைப் பகுதியின் அளவு காட்டப்பட வேண்டும்.
(இ)	சபையினால் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த ராகம வாகனத் தரிப்பிட வளவில் வெளி நபர் ஒருவரினால் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக்	அடுத்த நியமனம் செய்யப்படும் சபைக்கு அறிக்கையொன்று சமர்ப்பித்து	தற்காலிக கடையறையை அகற்றுவதற்கு அல்லது முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	விற்பனை நிலையம் ஒன்றிற்காக சபையினால் மாதாந்தக் கட்டணம் ஒன்று அறவீடு செய்யப்படுகின்றதெனவும், அவ்வாறு விற்பனை நிலையமொன்று நடாத்துவதற்காக முறைப் பிரகாரம் உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்கவில்லை. இந்த தற்காலிக பிளாஸ்டிக் பண்ட விற்பனை கடையின் காரணமாக வாகன தரிப்பிடத்தின் உரிமையாளருக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தின் காரணமாக 2024 பெப்ரவரி முதல் மே மாதம் வரை செலுத்த வேண்டிய மாதாந்த தவணைத் தொகை வட்டியின்றி 10 தவணைகளில் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதன்படி, சபையின் உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக வாகன தரிப்பிட வளவின் அளவு குறைவடைந்து அதன் மூலம் கிடைத்திருந்த வருமானத்தை இழத்தலும் ஏற்பட்டிருந்தது.	தீர்மானமொன்று எடுக்கப்படவுள்ளது என.	
(ஈ)	வருடாந்த வாடகைக்கு கொடுத்திருந்த சபைக்குச் சொந்தமான ஆதனங்களில் 05 ஆதனங்களுக்கான மாதாந்த வாடகை ரூபா 7,057,104 இற்கான நிலுவையொான்று காணப்பட்டதுடன், தொடர்ச்சியாக கொடுப்பனவை புறக்கணித்திருந்த போதிலும், சபையினால் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பிணைப் பணம் வைக்கப்பட்டுள்ள ஆதனங்களின் பணம் உரிய வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய ஆதனங்களுக்காக அதற்காக அனுப்பப்படும் என.	நிலுவை வாடகைத் தொகை அறவீடு செய்தலும் உடன்படிக்கையின் படி அறவீடு செய்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(உ)	ராகம 01 ஆம் இலக்க ஆடு மற்றும் கோழி இறைச்சிக் கடைக்காக உடன்படிக்கையொன்று மேற்கொள்ளாமல் 2024 ஆண்டின் போது ஆதனங்களை பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. 2024 ஒக்தோபர் 15 திகதியில் உள்ளவாறு ரூபா 915,959 இற்கான வாடகை குத்தகை நிலுவையாக காணப்பட்ட போதிலும், குத்தகையாக மாதந்தம் எதுவித தவணைப் பணமும் குத்தகையாளரினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், உடன்படிக்கையொன்றின்றி செயற்பட்டிருந்தமையால் சபைக்கு எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாமல் உள்ளது.	குத்தகையாளரை கண்டறிய முடியாமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது என.	உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ) படுவத்த உப அலுவலகத்தில் 10 கடையறைகள் நீண்ட கால அடிப்படையில் வாடகைக்க வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த கடையறைகளை வாடகைக்கு வழங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டது.		
(i) வாடகைக்கு எடுப்போருடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் 09 ஆவது நிபந்தனையின் படி வாடகைக்கு கொடுப்போருடன் பூர்வாங்க எழுத்துமூல இணக்கப்பாடொன்று பெற்றுக்கொள்ளாமல் துணை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கடை உரிமையாளரினால் செலுத்தப்பட வேண்டிய வாடகைத் தொகை உட்பட நிலுவை எதுவும் இன்றி செலுத்தப்பட்டது என.	உடன்படிக்கையின் படி செயற்பட வேண்டும்.
(ii) உடன்படிக்கைக் காலம் 2022 ஆண்டு முடிவடைந்திருந்த போதிலும், உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 30 இன் படி நடவடிக்கை எடுத்து உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு அல்லது மீண்டும் உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 09 கடையறைகள் வியாபார அலுவல்களை நடாத்திச் செல்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.	மிகவும் விரைவாக உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என.	உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு அல்லது மீண்டும் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii) உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 06 இன் படி வாடகைக்குப் பெறுவோரினால் உடன்படிக்கை ஆரம்பிக்கும் திகதியில் பாதுகாப்பு பிணை வைப்புத் தொகையென 12 மாத கால வரையறைக்கு உரிய வாடகைத் தொகைக்கு சமமான தொகையொன்று வாடகைக்கு கொடுத்தவருக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும், 10 கடையறைகள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.	தற்போது உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு பாதுகாப்பு பிணைத் தொகையும் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என.	உடன்படிக்கையின் படி செயற்பட வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 பெப்ரவரி 08 திகதிய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மீள்மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின் மூலம் 2021 ஒக்தோபர் 12 திகதி அங்கீகரிக்கப்பட்ட 13 ஆதனங்களுக்குரிய மீள்மதிபீட்டுக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி மற்றும் சரி செய்யப்பட வேண்டிய ஆதனங்களின் எண்ணிக்கையின் வித்தியாசங்களை சரி செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த வித்தியாசங்களை இனங்கண்டிருக்காமையால் 13 ஆதனங்களுக்குரிய குழு அறிக்கையின் படி பெறுமதி மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி இடையே ரூபா 386,235,250 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	நிலையான சொத்துக்களின் பெறமதியில் காணப்படும் வித்தியாத்தை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ)	தெரிவுப் கணக்காய்வுப் பரிசோதனையின் படி 15 ஆதனங்களின் பெறுமதி சரியாக மதிப்பீடு செய்து ஆவணப்படுத்தியிருக்கவில்லை.	இந்த 15 ஆதனங்களின் காணிகளின் பெறுமதியை ஒரு மாதத்தினுள் பெறுமதி மதிப்பீடு செய்து சரி செய்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என.	காணிகளின் சரியான பெறுமதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட வேண்டும்.
(இ)	2023 ஜூலை 10 திகதி சொத்துக்கள் முகாமைத்துவ மற்றும் மீள்மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் படி 176 மொத்த ஆதனங்களின் காணி உறுதிகள் தயாரிக்கப்பட வேண்டிய நில அளவைப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ள 18 ஆதனங்களும், நில அளவைப் படங்கள் தயாரிக்கப்பட வேண்டிய காணி உறுதிகள் காணப்படுகின்ற 20 ஆதனங்களும், காணி உறுதிகள் மற்றும் நில அளவைப் படங்கள் தயாரிக்கப்பட வேண்டிய 76 ஆதனங்களும், சிக்கல்களுடனான 19 ஆதனங்களும் இனங்காணப்பட்ட போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் அது தொடர்பாக சரி செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நில அளவைப் படங்கள் கிடைத்தவுடனே காணி உறுதிகள் எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	ஆதனங்களின் உறுதிகள் மற்றும் நில அளவைப் படங்கள் தயாரிக்கப்பட்டு ஆதனங்களின் உரிமையை மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(ஈ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஜாஎல பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 61 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களில் 10 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 08 TON பாதை தகர்க்கும் இயந்திரம் 2018 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.	கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட வாகனங்களை சபைக்கு உரித்தாக்குவற்கு கொம்டோலர் ஜனராலிற்கு அனுப்பப்பட்டு குறிப்பிட்ட உரித்தாக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை சபையின் பெயரில் உரித்தாக்கி சொத்துக்களை உச்ச மட்ட செயற்திறனுடன் பயன்படுத்த வேண்டும்.

3.4 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கந்தான மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் சுற்றுவட்டப் பாதையின் இடது புறமாக வடிகால் முறைமையை மறுசீரமைப்பதற்கான ஒப்பந்த வேலைக்கான திகதி குறிப்பிடப்படாத 02 மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன.	பிரதேசவாசிகளின் தீவிர கோறிக்கையின் படி மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டமொன்றன்றி வேறொரு செயற்திட்டத்திற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது என.	தேவைப்பாட்டினை சரியாக இனங்கண்டு சரியாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மேல் மாகாண பிரதான செயலாளரின் 01/2021 இலக்கம் கொண்ட நிதிச் சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு ஒப்பந்த வேலை சாட்டுதல் படிவத்தின் பிரகாரம் மேற்கூறிய ஒப்பந்த வேலைக்கான வேலைச் சாட்டுதல் மற்றும் குறிப்பிட்ட விண்ணப்பத்திரத்தின் 2.3 இன் கீழ் சங்கத்திற்கு காணப்படுகின்ற பாதை ஒப்பந்த வேலை தொடர்பான அனுபவம் தொடர்பாக சான்றிதழ் என வேறு தனியார் கம்பனியொன்றால் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் கணக்காய்விற்கு சிக்கலினை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பிட்ட செயற்திட்டம் உண்மையாகவே சங்கத்தினால் நிறைவேற்றப்பட்டதா அல்லது துணை ஒப்பந்தத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டதா என கணக்காய்வில் இனங்காண முடியவில்லை.	சங்கத்தினால் துணை ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருக்கவில்லை என.	சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவிணியில் 20 பேருக்கான வெற்றிடம் காணப்பட்டது.	எதிர் காலத்தில் இந்தச் சிக்கல் தீர்க்கப்படும் என நம்பப்படுகின்றது என.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2025 மார்ச் 25 திகதியில் உள்ளவாறு வருடாந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டிய சபையில் 05 வருடங்கள் முழுமையாக சேவையாற்றியிருந்த 16 உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. இந்த உத்தியோகத்தர்கள் சபையில் சேவையாற்றிய காலம் 05 வருடங்களுக்கும் 13 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால வரையறையாக காணப்பட்டது.	இடமாற்றக் கட்டளை 12 இல் தற்போது 10 செயற்படுத்தப்பட்டுள்ளது என.	பூர்த்தி செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டும்.